# ஆசாரக்கோவையில் ஒழுக்கநெறி

ரா.ரேவதி[1] & முனைவர் கோ.ப.நல்லசிவம்[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]துறைத்தலைவர்,

மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

revathiraj85@gmail.com&gpnsivam@gmail.com

5

**ஆய்வுச் சுருக்கம்**

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"[1]

ஒரு மனிதனுக்கு ஒழுக்கம் என்பது அவனது உயிரை விட மேலானது. ஏனெனில் அந்த ஒழுக்கமே அவனது வாழ்விற்கு மேலான அனைத்தையும் தருகிறது என்று திருவள்ளுவர் திருக்குறளில் சுட்டிக் காட்டுகிறார்.

**சான்றாக,**

‘கதிரவன் காலையில் உதிக்கிறது’. ‘ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சந்திரன் வளர்ந்து தேய்கிறது’. இவ்வாறு இயற்கை ஒரு ஒழுங்கமைப்போடே இருக்கிறது. இந்த இயற்கையில் இருந்து தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் அதற்கே உரித்தான ஒரு ஒழுங்கமைப்போடே உள்ளது. ‘மழை வரும் நேரம் மயில் தோகை விரித்து ஆடுவது இயற்கையின் ஒரு படைப்பு’. ‘நாய் தனக்கு உணவளிக்கும் மனிதரிடம் நன்றி உணர்வோடு இருக்கும். இது நாயின் இயற்கையான குணம்’. இவை அனைத்தும் தோன்றும் போதே இயற்கையாக ஒவ்வொரு குணாதிசயங்களைக் கொண்டு உள்ளது. இவ்வாறு மனிதனும் அவனுக்கே உரித்தான சில குணாதிசயங்களைக் கொண்டுள்ளான். ஒவ்வொரு மனிதனுக்கும் இருவகையான வாழ்வியல் உள்ளது. ஒன்று அகம் சார்ந்தது மற்றொன்று புறம் சார்ந்தது. பரிணாம வளர்ச்சி அடைந்த மனித இனமானது தனக்குத் தேவையான அனைத்து விதமான நாகரிக வளர்ச்சிகளையும், தானே ஏற்படுத்திக் கொண்டது. இதுவே நாளடைவில் பண்பாடாக மாறியது. அடுத்தடுத்து தோன்றிய மனித இனத்துக்கு இப்பண்பாடு செவி வழிய செய்திகளாகக் கூறப்பட்டது. பின்னாளில் நூலாக எழுத்து ஏற்றம் செய்யப்பட்டது. இதுவே பலவகையான பண்பாட்டுத் தொடர்புடைய நூல்களாக வெளிவருகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் விரவி காணப்படும், நூல்களில் ஒன்றான ஆசாரக்கோவை காட்டும், மனித வாழ்வியலின் ஒழுக்கம் மற்றும் அதன் உண்மை தன்மைப் பற்றிய சில கருத்துக்களை இக்கட்டுரை ஆராய முனைகிறது.

**திறவுச்சொற்கள்**

மனிதன், மனித இனம், ஒழுக்கம், அகவொழுக்கம், புறவொழுக்கம், பரிணாம வளர்ச்சி.

**முன்னுரை**

ஒவ்வொரு உயிரினமும் தோன்றிய நாள் முதற்கொண்டு தனது அடிப்படை தேவைகளுக்காக இயற்கையைச் சார்ந்தே இன்றளவும் உள்ளது. மனித இனமும் அவ்வாறே சார்ந்து உள்ளது. இயற்கை எவ்வாறு ஒரு ஒழுங்கமைப்போடு உள்ளதோ, அவ்வாறே அதனைப் பார்த்து வளர்ந்த மனிதன். தானும்

அந்த ஒழுங்கமைப்போடு வாழ வேண்டும் என எண்ணினான். அதாவது காலையில் எழுந்து தனக்கான அடிப்படைத் தேவைகளான உண்ணுவது, உறங்குவது என வாழ்ந்து வந்த மனிதன். கால மாற்றங்கள் மற்றும் நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில் தானே உழைப்பது, தனது குடும்பத்துக்காக உழைப்பது, மற்றவர்களுக்கு உதவுவது, தன்னால் பிறர் துன்பப் படாமல் இருப்பது எனப் பல வகைகளில் தனது குணங்களை மேம்படுத்திக் கொள்ள ஆரம்பித்தான்.

இதுவே பின் நாளில் அவனது குணமாகவும் மாறியது. ஒவ்வொரு மனிதக் கூட்டமும் இந்த குணங்களைப் பின்பற்றும் போது, அதுவே பண்பாடாக விளங்கியது. இந்தப் பண்பாடு தனக்கும், தன் குடும்பத்துக்கும் என்னும் பொழுது அக ஒழுக்கமாகவும். பிறருக்கு மற்றும் சமுதாயத்திற்கு என்னும் பொழுது, புற ஒழுக்கம் என இரு வகையாகப் பிரிந்து காணப்படுகிறது. தனக்கே உரித்தான அக ஒழுக்கத்தில் அடிப்படைக் குணங்களான பொய் கூறாமை, திருடாமை, அன்பு செய்தல், உடைமையின்மை போன்றவைகளையும், புற ஒழுக்கம் என்று கூறம் பொழுது, தூய்மையாகவும், பிறரைக் துன்பப்படுத்தாது, பிறன்மனை நோக்காது போன்ற குணங்களை ஒரு மனிதன் பெற்று வாழ்ந்து வருகின்றான்.

**ஆசாரக்கோவை**

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். ஆசாரம் + கோவை = ஆசாரக்கோவை. “ஆசாரம் என்பது ஒழுக்கத்தை”[2] குறிக்கும். கோவை என்பது அடுக்கி கூறுவதாகும். இந்நூலை இயற்றியவர் முள்ளியார். ஆசாரக்கோவை என்பது 100 வெண்பாக்களைக் கொண்டு, ஐந்து பிரிவுகளாகக் காணப்படுகிறது. குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா போன்றவை ஆகும்.

**ஒழுக்கம்**

மனித இனம் தோன்றி வாழ்ந்து வந்த காலம் முதல், அவர்கள் இருந்த இடத்தில் கிடைத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அவ்வாறு அவர்கள் வாழ்ந்த நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பட்டது. அங்கு தோன்றிய பழக்கவழக்கங்கள் நாகரிகம் என்று ஆயிற்று. உதாரணமாக, சிந்து சமவெளி நாகரிகம், ஹரப்பா நாகரிகம் போன்றவைகள் ஆகும். அடிப்படைத் தேவைகளைத் தாண்டி பரிணாம வளர்ச்சி பெற்ற மனிதன். உணவுகளைச் சமைத்து உண்ண ஆரம்பித்தான். ஆடைகளை அணிய ஆரம்பிக்கிறான். மற்றவர்களோடு பேச மொழியைப் பயன்படுத்தினான். பிற உயிர்களிடம் அன்பு செய்ய ஆரம்பித்தான். பல காலங்களாக இவை மேம்பாடு அடைந்து. இன்றைய சூழலில் அவை மனிதனின் குணங்களாகப் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளன. ஒவ்வொரு மனிதனும் தனித்து வாழ்வது இல்லை. தனது குடும்பம், உறவினர், சமுதாயம் என்று கூட்டமாகவே வாழ்ந்து வருகின்றான். அவ்வாறு வாழ்ந்து வரும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு குணாதிசயங்களும், பழக்க வழக்கங்களும் உண்டு. இந்த குணங்கள் மற்றவர்களைப் பாதிக்காதவாறும், ஒரு ஒழுங்கு முறையோடு இருக்கவே, நமது சான்றோர்கள் நமக்கு நல்ல பழக்க வழக்கங்களையும், ஒழுக்கத்தையும் பல நூல்கள் வழியாகக் கொடுத்துள்ளனர். தமிழ் நூல்களில் ஒன்றானஆசாரக்கோவை. ஒரு மனிதன் தனது பிறப்பு முதல் இறப்பு வரை எவ்வாறு இருக்க வேண்டும் என்று நமக்கு எடுத்

துக்காட்டுகிறது.

**அகவொழுக்கம்**

**வைகறை கடமை**

" வைகறை யாமம் துயிலெழந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"[3]

இப்பாடல் மூலம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி விடியற்காலையில் எழுந்ததும் அன்றைய தினம் செய்ய வேண்டிய நல்அறங்களையும், வேலைகளையும், ஆராய்ந்து பின்பு தாய் தந்தையை வணங்க வேண்டும் என்பதாகும். ஒரு மனிதன் அகஒழுக்கத்துடன் எவ்வாறு அன்றைய நாளைத் தொடங்க வேண்டும் என்பதற்கான பாடலாக இது அமைந்துள்ளது.

**வாழ்வில் நல்லொழுக்கம்**

" பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கு
மையந்தீர் காட்சியார் சிந்தியார் - சிந்திப்பி
னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும்"[4]

பொய் பேசுதல், கோள் சொல்லுதல், பிறர் பொருளைத் திருடுதல், பொறாமை கொள்ளுதல் என்ற, இந்த நான்கையும் தெளிவான அறிவைப் பெற்ற ஒருவர் நினைக்கக் கூட மாட்டார். இந்த நான்கு குணங்களையும் ஒருவர் நினைத்தால், இம்மையில் அவர் பிச்சை எடுப்பதாகவும். மறுமையில் நரகத்தில் செல்வதோடு, தெய்வம் அவரை அழித்து விடும் என்பதாக ஆசாரக்கோவை நமக்கு உணர்த்துகின்றது.

**ஒழுக்கமுடையார் பண்புகள்**

ஒழுக்கம் உடையவர் செய்யாத செயல்கள் எது என்பது பற்றி நாம் அறிந்து கொள்ளுவது,

"தெறியோடும்,கல்லேறு,வீளை,விளியே
விகிர்தம், கதம்கரத்தல்,கைபுடை தோன்ற
உறுப்புச் செகுத்தலோடு, இன்னவை எல்லாம்
பயிற்றார் – நெறிப்பட் டவர்"[5]

எந்த ஒரு பொருளையும் வீசி எறிய மாட்டார்கள். கல்லை எறிய மாட்டார்கள். கனைக்க மாட்டார்கள். தூரத்தில் செல்பவனைச் சத்தமாகக் கூப்பிட மாட்டார்கள். யாரையும் மரியாதைக் குறைவாகப் பேச மாட்டார்கள். யாரிடமும் கோபம் கொள்ள மாட்டார்கள். கைத்தட்டி மரியாதையின்றி யாரையும் கூப்பிட மாட்டார்கள். பிறருக்குத் தெரியும் படியாக கண் போன்ற உறுப்புகளை அசைக்க மாட்டார்கள். இதுவே ஒழுக்கமுடையாரின் பண்புகளாகக் கூறுபடுகின்றது.

**அறிவுடையோர் பேசும் முறைமை**

ஒரு மனிதன் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள மிகவும் முக்கியமான ஒன்று மொழி. அதைக் கையாள ஒருவர் எவ்வாறு மற்றவருடன் பேச வேண்டும் என்று ஆசாரக்கோவையில்,

" விரைந்துரையார் மேன்மேல் உரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித்துரையார் ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து"[6]

அறிவுடைய சான்றோர் பெருமக்கள் ஒருவரிடம் ஒன்று பேசும்போது, விரைவாகப் பேச மாட்டார். பலமுறை அடிக்கடி பேச மாட்டார். பொய்யான செய்திகளை விவரித்துக் கூற மாட்டார். தான் செய்யவேண்டிய அனைத்தையும் காலத்திற்கு ஏற்றவாறு சிறிய சொற்களைப் பயன்படுத்தி சுருங்கச் சொல்லிவிடுவார். காலம் அறிந்து பேசும் பண்புடையவர்கள்.

**புறவொழுக்கம்**

**அன்பு செய்தல்**

“விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லா லுண்ணாரே யென்றும்
ஒழுக்கம் பிழையா தவர்”[7]

ஒழுக்கம் உடைய நன்மக்களின் பண்பு என்பது, பிறருக்கு உணவு கொடுக்காமல் தான் உண்ண மாட்டார்கள். விருந்தினர், முதியவர், பிள்ளைகள், பசுக்கள், பறவைகள் என உணவைக் கொடுத்த பின்பே தாம் உணவை உண்ணுவர். இவ்வாறே தன்னுயிர் போல் பிற உயிர்களையும் சமமாகக் கருதும் இயல்புடையவர்கள்.

**தூய்மைநெறி**

“நால்வகை எச்சிலும் நன்கு கடைப்பிடித்து
ஓதார், உரையார் வளராரே - எஞ்ஞான்றும்
மேதைகள் ஆகுறு வார்”[8]

அறிவுடைய சான்றோர் ஆக விரும்பும் ஒருவர். நால்வகை எச்சில் எனப்படும். மலம், சிறுநீர், மகளிர் புணர்ச்சி, பெண்டிர் எச்சில் பருகுதல் போன்ற நான்கு வகை மலங்களையும் கண்டறிந்து. அவை உண்டாகும் போது எதை ஒன்றையும் படிக்க மாட்டார்கள், எதைப்பற்றியும் உரையாட மாட்டார்கள், உறங்காமல் இருப்பார்கள். இவை அனைத்தும் சான்றோர்கள் கடைபிடிக்கும் தூய்மையாகும்.

**கற்புநெறி**

“பிறர்மனை கட்களவு சூது கொலையோ
டறனறிந்தா ரிவ்வைந்து நோக்கார் - திறனிலரென்
றெள்ளப் படுவதூஉ மன்றி நிரயத்துச்
செல்வழி யுய்த்திடுத லால்”[9]

பிறர் மனைவியை விரும்புதல், கள்ளருந்துதல், களவு செய்தல், சூது ஆடல். இவை வாழ்வில் செய்யத் தகாத செயல்கள் என்றும், இச்செயல்களைச் செய்தால் நரகத்திற்குக் கொண்டு செல்லும் எனக், கருதி அறத்தை உணர்ந்த அறிவுடைய சான்றோர்கள் இவற்றை ஒருபோதும் செய்யார்.

**ஆசாரக்கோவையின் எட்டு உறுப்புகள்**

“நன்றி அறிதல், பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்உயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை
நல்இனத் தாரோடு நட்டல் - இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து”[10]

ஆசார ஒழுக்கம் என்னும் இவ்வெட்டும் ஆசாரக்கோவையின் வித்து எனப்படும். தனக்குப் பிறர் செய்த உதவியை எப்பொழுதும் மறவாது இருத்தல். பொறுமையை என்றும் கடைப்பிடித்தல். பிறரிடம் இனிய சொற்களை எப்பொழுதும் பேசுதல். எந்த ஒரு உயிருக்கும் தீங்கு செய்யாதிருத்தல் கல்வியைக் கற்று அறிவுடையவர் ஆதல். உலகத்தில் நடைமுறை அறிந்து. அந்த நடையுடன் ஒப்புரவோடு விளங்குதல். மெய்ஞ்ஞானம் என்னும் அறிவைப் பெறுதல். நற்குணங்கள் பொருந்திய சான்றோர்களுடன் நட்போடு இருத்தல் ஆகியவையே எட்டு உறுப்புகளாகக் கூறப்படுகின்றது.

**பிறவிப் பயன்கள்**

“பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்லிநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும்
ஒழுக்கம் பிழையா தவர்”[11]

உயிரினும் மேலாகப் போற்றப்படும் ஒழுக்கத்தின் மூலம், ஒரு மனிதன் அடையும் இந்த எட்டு பிறவியின் பயன்களாக நற்குடியில் பிறப்பார், நீண்ட ஆயுள் காலம், பொருட்செல்வத்தோடு என்றும் விளங்குதல், அழகோடு இருத்தல், மேன்மையான சொல்வளம் உடையவராக இருத்தல், கல்வியில் மேம்பட்டு விளங்குதல், நோயற்ற வாழ்வு, வீடு, மனை போன்ற நில உடைமைகளைப் பெற்று வாழ்தல் ஆகியவைகளாகும். எந்த ஒரு மனிதனும் பிறக்கும் போது தனது முன்னோர்கள் மற்றும் தான் வந்த வழி இவற்றின் குணங்களோடே பிறக்கிறான். ஆனால் அவன் வளரும் போது தனது அறிவைக் கொண்டு தனது குணங்களை வேறுபடுத்திப் பார்க்கிறான். அவ்வாறு எவன் ஒருவன் சுயசிந்தனை செய்து, தன்னை அறிகிறானோ அவன் மேற்கூறிய அனைத்து பிறவிப் பயனையும் பெறுவான் என்பது ஆசாரக்கோவையின் வழி நம் அனைவருக்கும் எடுத்துரைக்கப்படுகிறது.

**மேற்கோள்கள்**

1. திருக்குறள், 131.
2. பழைய உரையாசிரியர்கள், பதினெண் கீழ்க்கணக்கு 2, ப - XVII.
3. ஆசாரக்கோவை, பா. எ - 4.
4. ஆசாரக்கோவை, பா. எ - 38.
5. ஆசாரக்கோவை, பா. எ - 53.
6. ஆசாரக்கோவை, பா. எ - 76.
7. ஆசாரக்கோவை, பா. எ - 21.
8. ஆசாரக்கோவை, பா. எ - 8.

9. ஆசாரக்கோவை, பா. எ - 37.
10. ஆசாரக்கோவை, பா. எ - 1.
11. ஆசாரக்கோவை, பா. எ - 2.

**துணைநூற்பட்டியல்**


1. கௌமாரீஸ்வரி.எஸ், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சாரதா பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு - 2009.
2. சுப்பிரமணியன்.ச.வே, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு - 2010.
3. பழைய உரையாசிரியர்கள், பதினெண் கீழ்க்கணக்கு 2, மாணவர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு - 2009.
4. பொன்னம்மாள்.ஆர், திருக்குறள் தெளிவுரை, அன்னை புத்தகாலயம் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு - 2001.
5. மாணிக்கனார்.அ, பதினென் கீழ்க்கணக்கு நூல்கள், வர்த்தமானன் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு - 1991.
6. இராமசுப்பிரமணியம்.வ.த, பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி 2, செல்லப்பா பதிப்பகம் மதுரை, முதற்பதிப்பு – 2009.